[பேரவைத் தலைவர்] [2010 நவம்பர் 12

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிற்பகல் 2-40

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(இ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை/ஆட்சிக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழுவிற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.ஏ.பி. சிவாஜி அவர்களிடமிருந்தும், மதுரை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. தண்டபாணி அவர்களிடமிருந்தும் முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன. அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிமன்றப் பேரவைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ராஜ்குமார், திரு. து. ரவிக்குமார் மற்றும் திரு. அ. அருண்மொழிதேவன் ஆகியோரிடமிருந்து முறையாக வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன. தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கையும், முறையாக வரப்பெற்றுள்ள வேட்பு மனுக்களின் எண்ணிக்கையும் சமமாக இருப்பதால், வேட்பு மனு அளித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் அந்தப் பதவிக்கு முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.

சென்னை மற்றும் மதுரை அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக்காலம் தேர்ந்தெடுக்கப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகள் ஆகும். அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் 6-12-2010 முதல் மூன்று ஆண்டுகள் ஆகும்.

2010 நவம்பர் 12] [பேரவைத் தலைவர்]

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உறுப்பினர் ஏதாவது ஒரு காரணத்திற்காக பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய குழு உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

கடந்த ஐந்து நாட்களாக நடைபெற்ற சட்டப் பேரவைக் கூட்டத் தொடரில் காரசாரமான விவாதங்கள் நடைபெற்றபோதும், சபை அமைதியான முறையில் நடைபெறுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது நன்றியைப் பேரவையின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி

(ஈ) பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கக் கோரும் தீர்மானம், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பேரவை விதி 25 (1)-ன்படி, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப் பெறலாம்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்படுகிறது. நன்றி, வணக்கம்.